## இலக்கண வரலாறு

பருவம்-II CC4 கற்பித்தல் : 6 தரப்புள்ளி : 5 பாடக்குறியீட்டு எண் : 18K2T...

நோக்கம்: தமிழை முதன்மைப் பாடமாகக் கொண்டு பயிலும் மாணவர்கள் தமிழ் இலக்கண வரலாறு பற்றிய முழுமையான அறிவைப் பெறும் வகையில் இப்பாடம் உருவாக்கப்பட்டுள்ளது.

பயன் : மாணவர்கள் இலக்கண வரலாற்று அறிவு பெறுதல்.

அலகு – 1 இலக்கணம் - விளக்கம், இலக்கியமும் இலக்கணமும் - இலக்கண தோற்றம் - இலக்கண வகைகள் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, ஐந்திலக்கண நூல்கள்.

அலகு – 2 அகத்தியம் - தொல்காப்பியம், இறையனார் களவியல் - பன்னிருபடல புறப்பொருள் வெண்பாமாலை – வீரசோழியம் - நன்னூல் - நேமிநாதம் இலக்கண விளக்கம் - தொன்னூல் விளக்கம் - சுவாமிநாதம் - முத்துவீரியம்.

அலகு – 3 அகப்பொருள் விளக்கம் - மாறனகப் பொருள் - களவியல் காரிகை - தமிழ்நெறிவிளக்கம் - பன்னிருபாட்டியல் - வெண்பா பாட்டியல் நவநீதப்பாட்டியல் - வரையறுத்த பாட்டியல் - சிதம்பரப்பாட்டியல்.

அலகு – 4 இடைக்கால யாப்பிலக்கண நூல்கள் - யாப்பருங்கலம் யாப்பருங்கல விருத்தி - யாப்பருங்கலக் காரிகை – காக்கைப் பாடினியம் - சிதம்பர செய்யுட்கோவை - இடைக்கால அணி இலக்கண நூல்கள் தண்டியலங்காரம் மாறனலங்காரம் - விசாகப் பெருமாள் அணி இலக்கணம்.

அலகு – 5 நிகண்டுகள் - சேந்தன் திவாகர நிகண்டு – பிங்கல நிகண்டு - உரிச்சொல் நிகண்டு - சூடாமணி நிகண்டு – அகராதி நிகண்டு – உரைநடையில் அமைந்த இலக்கண நூல்கள் - மொழி வளர்ச்சிக்கு இலக்கணப் பங்களிப்பு.

பாட நூல்: புலவர் இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு.
மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.

பார்வை நூல்:
1. சோம. இளவரசு - இலக்கண வரலாறு.
2. சரளா ரங்கநாதன், தமிழ்அகராதிகளின் வளர்ச்சிப் போக்கும் அமைப்பு வேறுபாடும்.
3. பெ.மாதையன் - அகராதியியல்.
4. பெ.மாதையன் - நிகண்டு

( அனைத்து அலகுகளிலும் வினாக்கள் சமமாக அமைதல் வேண்டும் )

# அலகு - 1

# இலக்கண வரலாறு

## இலக்கியமும் இலக்கணமும்:

இலக்கியம் தாய்; இலக்கணம் சேய். இலக்கியம் தேமாங்கனி; இலக்கணம் தீஞ்சுவைச்சாறு. இலக்கியம் பெருவிளக்கு; இலக்கணம் அதன் ஒளி. இலக்கியம் எள்; இலக்கணம் எண்ணெய். இந்த உறவு முறையை - பிணைப்பு முறையை நம் முன்னோர் நன்கு அறிந்து தெளிந்திருந்தனர். இதனாலேயே,

'இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினுள் எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்'

எனக் கூறிப்போந்தனர். எனவே, இலக்கியப் பெருந்தருவின் நிழலில் எழுந்து நிற்பதே இலக்கணம் என்பது பெறப்படும். இலக்கியமும் இலக்கணமும் வேறுபட்ட நிலையுடையன அல்ல; ஒருவழிப்பட்ட ஒற்றுமையுடையனவே ஆகும்.

### 1, 2. எழுத்தும் சொல்லும்:

தொல்காப்பியர் எழுத்தும் சொல்லும் ஆய்ந்தார்; பொருளும் ஆய்ந்தார். ஆனால் பின்வந்தோர் எழுத்தும் சொல்லுமே சிறப்பாகக் கருதத்தக்கன என எண்ணினர். இந்நிலையில் எழுத்தும் சொல்லும் பற்றி மட்டும் இலக்கணங்கள் தோன்றின. கி.பி. 12-ம் நூற்றாண்டளவில் எழுத்தும் சொல்லும் உணர்த்தும் நேமிநாதம் தோன்றியது. நன்னூல் கி.பி. 13-ம் நூற்றாண்டில் எழுந்தது. இந்நன்னூல் ஐந்திலக்கணமும் உணர்த்துவது எனக் கொண்டாலும், எழுத்தும் சொல்லுமே நிலைத்தன.

எழுத்தும் சொல்லும் இலக்கணமேயாயினும் சொல்லிலக்கணமே இலக்கணம் எனக் கருதினர். வடமொழி வாணர்கள் சொல்லிலக்கணத்தையே வியாகரணம் எனக் கொண்டனர். வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்கள் சொல்லிலக்கணத்தையே பெரிதும் ஆராய்ந்தன. கி.பி. 17-ம் நூற்றாண்டில் எழுந்த பிரயோக விவேகமும், இலக்கணக் கொத்தும் சொல்லிலக்கணம் பற்றியே விரிவாக விளக்கின.

எழுத்தும் சொல்லும் உணர்த்தும் நூல்கள் தொல்காப்பியம், வீரசோழியம் நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம் என்பன.

### 3. அகப்பொருள் இலக்கணம்:

பொருளதிகாரம் கிடைக்காததால் எழுந்த இலக்கண நூலே இறையனார் களவியல் என அந்நூல் உரை கூறுகின்றது. இறையனார் களவியல் தோன்றிய காலத்தில் எழுத்தும் சொல்லும், யாப்பும் கிடைத்தன. பொருள் கிடைக்கவில்லை; ஆதலால் இறையனார் களவியல் காண வேண்டிய நிலைமை ஏற்பட்டது என அறிகிறோம். இக்காலத்தில் இலக்கணம்

எழுத்து, சொல், பொருள், யாப்பு என நான்கு வகையாக ஆராயப்பட்டது என்று தோன்றுகிறது. மேலும் பொருள் என்பது அகப்பொருளே என்பது நாம் அறியவேண்டும். பொருளதிகாரம் வல்லாரைக் காணோம் என்று வருந்தியவர்கள் இறையனார் களவியல் கண்டனம் என அகப்பொருள் இலக்கணத்தையே பொருளாகக் கருதினர். இறையனார் களவியல் தோன்றிய காலமுதலே அகப்பொருள் தனியாக வளரத் தொடங்கியது. கி.பி. 12-ம் நூற்றாண்டில் நம்பியகப் பொருள் தோன்றியது. இந்நூலுக்கு முற்பட்டது எனக் கருதப்படும் திருக்கோவையாரில் அகப்பொருள் துறைகள் அமைந்த சூத்திரங்களும், துறைகளை விளக்கும் கொளுக்களும் காணப்படுகின்றன. இவை, யாரால் இயற்றப்பட்டன என்று புலனாகவில்லை. பின்வந்த பழனிக் கோவையிலும் இவ்வமைப்பு காணப்படுகிறது. கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் மாறனகப் பொருள் தோன்றியது. கி.பி. 17-ம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற இலக்கண விளக்கம், தொல்காப்பியத்தினையும் நம்பியகப் பொருளையும் பின்பற்றி அகப்பொருள் இலக்கணம் வகுக்கின்றது. முத்துவீரியம், தொன்னூல் விளக்கம் என்பனவும் அகப்பொருள் இலக்கணத் தினைக் கூறின. இறையனார் களவியலை ஒட்டிக் களவியற்காரிகை என்னும் நூலும் இயற்றப்பெற்றது. பரிமேலழகர் முதலியோருக்கு முற்பட்ட இந்நூல், அகப்பொருள் இலக்கணம் உணர்த்துகின்றது.

தொல்காப்பியர், அகப்பொருள் இலக்கணத்தினை வகுக்கும்போது, ஒவ்வொரு பாடலும் ஒன்றற்கொன்று தொடர் பின்றித் தனித்தனி நாடக பாத்திரங்களின் கூற்றாக அமைந்த நிலைக்கே இலக்கணம் கூறுகின்றார். இதனால் தொல்காப்பியத்தில் கூற்று உண்டேயன்றித் துறையில்லை என அறியலாம். பின் வந்தோர் நாடக பாத்திரம் பேசுதல்போல அமைந்த நிலையினின்றும் வேறுபட்டுத் துறைகளாகப் பகுத்து, ஒரு தொடர்கதை போல இலக்கணம் கண்டார்கள். இதனால் பல கோவை இலக்கியங்கள் தமிழுக்குக் கிடைத்தன.

அகப்பொருள் இலக்கணம் கூறும் நூல்கள்:- தொல்காப்பியம், இறையனார் களவியல், தமிழ்நெறிவிளக்கம், வீரசோழியம், நம்பியகப் பொருள், களவியற்காரிகை, மாறனகப் பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சாமிநாதம் என்பன. இவையன்றித் திருக்கோவையார், பழனிக்கோவை ஆகிய நூல்களில் உள்ள நூற்பாக்களும் அகப்பொருள் இலக்கணம் கூறுகின்றன.

## 4. புறப்பொருள் இலக்கணம்:

தொல்காப்பியம் புறத்திணையியல், புறப்பொருள் இலக்கணம் பற்றிப் பேசுகின்றது. இதன்பின் பன்னிரு படலம் எழுந்தது. பன்னிருபடலத்தின் வழிநூலாகப் புறப்பொருள் வெண்பாமாலை கி.பி. 8-ம் நூற்றாண்டில் தோன்றியது. இதன்பின் தனியாகப் புறப்பொருள் நூல்கள் தோன்றவில்லை. வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் என்பன ஓரளவு புறப்பொருளைப் பற்றிய இலக்கணம் கூறுகின்றன. வீரசோழிய உரைகாரர் மேற்கோளாகக் காட்டும் புறப்பொருள் பற்றிய நூற்பாக்கள் தனி நூலைச் சார்ந்தனவா? அவர் பாடியனவா? என்பது தெரியவில்லை.

புறப்பொருள் இலக்கணத்தைப் பொறுத்தமட்டில் புறப்பொருள் வெண்பாமாலையே சிறப்புற்று விளங்குகின்றது. வேறு புறப்பொள் இலக்கண நூல்கள் தோன்றாமைக்கு உரிய காரணம் விளங்கவில்லை. ஒரு வேளை, காதல் பாடல்களும் - ஆன்மீக இலக்கியங்களும் போதும் என நினைத்தார்களோ, என்னவோ? அறியோம். புறப்பொருள் இலக்கியங்களும் மிகுதியாகத் தோன்றவில்லை என்பதனை இங்கு நாம் சிந்தித்தல் வேண்டும். பொதுவாக மனிதனை விலங்காகவும் மனித இதயத்தைக் கல்லாகவும் ஆக்கக்கூடிய போர் முறைகளில் கவிஞர்களுடைய உள்ளம் ஈடுபடாமல் போயிருக்கலாம்.

## 5. யாப்பிலக்கணம்

தொல்காப்பியம் செய்யுளியல் மிக விரிவுடையது. இவர் காலத்திலேயே பலர் யாப்புப் பற்றித் தனியாக ஆராய்ந்திருக்க வேண்டும். தொல்காப்பியர் பல இடங்களில் 'யாப்பறி புலவர்' எனச் சுட்டுதல் இதற்குச் சான்றாகும். தொல்காப்பியரோடு ஒருசாலை மாணவர் எனக் கூறும் காக்கைபாடினியார் யாப்பிலக்கணம் செய்ததாக அறிகிறோம். காக்கைபாடினியார் என்னும் பெயருடையார் இருவர், சிறுகாக்கைபாடினியம், பெருங்காக்கைபாடினியம் என்னும் இரண்டு நூல்கள் இயற்றினர். இவர்கள் பல்லவர் காலத்தினர் என்பர். கி.பி. 10-ம் நூற்றாண்டில் யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் தோன்றின. இந்நூலுரைகளால் பல யாப்பிலக்கண நூல்களை அறிகிறோம். அவற்றை நூலின் இறுதியில் உள்ள பட்டியலில் காண்க.

## அலகு - 2

# அகத்தியம்

**அகத்தியரைப் பற்றியும் அகத்தியத்தைப் பற்றியும் இறையனார் களவியலுரை கூறுகின்து. இவ்வுரை, அகத்தியம் தலைச்சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் இலக்கண நூலாக இலங்கிற்று எனவும் இயம்புகின்றது.**

அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் வெளிப்படையாகக் காணப்படவில்லை. பரிபாடலில் உள்ள 'பொதியின் முனிவன்' என்னும் தொடருக்கு, 'அகத்தியன் என்று ஓர் நட்சத்திரம்' என்று உரை வரைந்துள்ளார் பரிமேலழகர். மதுரைக் காஞ்சியில், 'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின், தொன்முது கடவுள்' என்னும் பகுதியில், தொன்முது கடவுள்' எனவரும் தொடருக்கு, 'தொன்முது கடவுள் என்பது அகத்தியரைக் குறிக்கும்' என நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். இவ்விரண்டு இடங்களும், உரையாசிரியர்கள், அகத்தியரைப் புகுத்திக் கூறிய இடங்களே ஆகும். (சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும்) அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

**அகத்தியரின் மாணவர்:**

அகத்தியரிடம் பயின்ற மாணவர் பன்னிருவர் என்பர். அவர்களாவார்:- தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரனார், கழாரம்பர், அவிநயன், காக்கைபாடினி, நற்றத்தன், வாமனன் என்பவர். இம்மாணவர் பன்னிருவரும் பன்னிருபடலம் என்னும் புறப்பொருள் இலக்கண நூல் செய்தனர் என்றும் இந்நூலின் வழிவந்ததே புறப்பொருள் வெண்பாமாலை என்றும் வெண்பாமாலையின் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. இதனால் பன்னிருபடல ஆசிரியர்களுள் தொல்காப்பியரும் ஒருவர் என அறிகிறோம். ஆனால், இளம்பூரணர் காலத்தில் பன்னிரு படலத்தில் வெட்சிப் படலம் தொல்காப்பியர் செய்ததன்று என்ற கொள்கை நிலவியது. இளம்பூரணரும் இக்கொள்கையினரே.

**அகத்தியரும் தொல்காப்பியரும்:**

அகத்தியர் மாணவர் பன்னிருவருள், தொல்காப்பியரே தலைமை வாய்ந்தவர் எனக் கருதினர்.

'ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியன்'

என்பது பன்னிருபடலப் பாயிரச் செய்யுள் எனக் கருதும் பகுதி.

'தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்'

என்பது வெண்பாமாலையின் சிறப்புப் பாயிரம். இவ்விரண்டும், தொல்காப்பியர் அகத்தியரின் மாணவர் என்பதனைக் காட்டும். தொல்காப்பியரோடு ஒருங்குகற்ற பனம் பாரனார், தாம்பாடிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில், அகத்தியனாரைப் பற்றியும் அவரது மாணவர் தொல்காப்பியர் என்பது பற்றியும் ஏதும் குறிக்கவில்லை. பனம்பாரனார் அகத்தியர் மாணவருள் ஒருவரும் கூட. இவ்வாறிருந்தும், இவர் அகத்தியரைப் பற்றிக் கூறாதது வியப்பே. ஆனால் நச்சினார்க்கினியர், பாயிரத்தில் வரும்

## அகத்தியரின் மாணவர்:

அகத்தியரிடம் பயின்ற மாணவர் பன்னிருவர் என்பர். அவர்களாவார்:- தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரனார், கழாரம்பர், அவிநயன், காக்கைபாடினி, நற்றத்தன், வாமனன் என்பவர். இம்மாணவர் பன்னிருவரும் பன்னிருபடலம் என்னும் புறப்பொருள் இலக்கண நூல் செய்தனர் என்றும் இந்நூலின் வழிவந்ததே புறப்பொருள் வெண்பாமாலை என்றும் வெண்பாமாலையின் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. இதனால் பன்னிருபடல ஆசிரியர்களுள் தொல்காப்பியரும் ஒருவர் என அறிகிறோம். ஆனால், இளம்பூரணர் காலத்தில் பன்னிரு படலத்தில் வெட்சிப் படலம் தொல்காப்பியர் செய்ததன்று என்ற கொள்கை நிலவியது. இளம்பூரணரும் இக்கொள்கையினரே.

## அகந்தியரும் தொல்காப்பியரும்:

அகத்தியர் மாணவர் பன்னிருவருள், தொல்காப்பியரே தலைமை வாய்ந்தவர் எனக் கருதினர்.

> 'ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
> அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
> பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
> நல்லிசை நிறுத்த தொல்காப் பியன்'

என்பது பன்னிருபடலப் பாயிரச் செய்யுள் எனக் கருதும் பகுதி.

> 'தென்மலை இருந்த சீர்சால் முனிவரன் அகத்தியன்
> தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
> துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்'

என்பது வெண்பாமாலையின் சிறப்புப் பாயிரம். இவ்விரண்டும், தொல்காப்பியர் அகத்தியரின் மாணவர் என்பதனைக் காட்டும். தொல்காப்பியரோடு ஒருங்குகற்ற பனம் பாரனார், தாம்பாடிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில், அகத்தியனாரைப் பற்றியும் அவரது மாணவர் தொல்காப்பியர் என்பது பற்றியும் ஏதும் குறிக்கவில்லை. பனம்பாரனார் அகத்தியர் மாணவருள் ஒருவரும் கூட இவ்வாறிருந்தும், இவர் அகத்தியரைப் பற்றிக் கூறாதது வியப்பே. ஆனால் நச்சினார்க்கினியர், பாயிரத்தில் வரும்

'அதங்கோட்டாசாற்கு அரில் தபத் தெரிந்து' என்னும் தொடரினைக் கொண்டு அகத்தியரையும் தொல்காப்பியரையும் இணைத்துக் கதையொன்று காட்டுகின்றார். இக்கதை, தொல்காப்பியத்தின் பெருமை காட்டக் கட்டப்பட்டதேயாயினும் உண்மையில் தொல்காப்பியத்தின் பெருமை கூறுவதாக இல்லை. ஆசிரியரும் மாணவரும் ஒருவர்க்கு ஒருவர் சபித்துக் கொண்ட போராட்ட நிலையே இக்கதையில் புலனாகின்றது. இக்கதையினை ஆதாரமுடையது என்று ஏற்றுக்கொள்ளுதல் இயலாது. இக்கதையின் தோற்றம்பற்றிப் பின் வருமாறு அறிஞர் க. வெள்ளைவாரணனார் கூறுவர்.

தொல்காப்பியனாரை அகத்தியர்க்கு மாணவர் எனக் கொள்வாரை, 'நான்கு வருணத் தொடுபட்ட சான்றோர்' எனவும், மாணவர் அல்லர் எனக் கூறுவாரை, 'வேத வழக்கொடு மாறுகொள்வார்' எனவும் பேராசிரியர் குறித்துள்ளார். இதனால் பேராசிரியர் காலத்தில், அகத்தியர்க்கு மாணவர் தொல்காப்பியர் என்னும் கதையினை உடன்படுவாரும் மறுப்பாரும் என இருதிறத்தார் இருந்தமை புலனாம். தொல்காப்பியனார் அகத்தியருக்கு மாணவரல்லர் என்னும் கொள்கையினர், தம் காலத்தில் வழங்கிய அகத்தியச் சூத்திரங்களுக்கும், தொல்காப்பியத்திற்கும் உள்ள முரண்பாடுகளைச் சான்றாகக் காட்டியிருத்தல் வேண்டும். இந்நிலையில் அகத்தியர் மாணவர் தொல்காப்பியர் என்னும் கொள்கையுடையோர், அகத்தியர்க்கு மாணவராகத் தம்மால் சொல்லப்படும் தொல்காப்பியனார், அகத்தியத்திற்கு மாறுபட நூல் செய்வதற்கு உரிய காரணத்தினைப் படைத்துரைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. இந்நிலையில் புனைந்து வழங்கப் பெற்ற கதையே, தொல்காப்பியச் சிறப்புப் பாயிரவுரையில் நச்சினார்க்கினியரால் எடுத்துக்காட்டப் பெற்றதாகும்.[1]

இவற்றை நோக்கும்போது, 'அகத்தியர் மாணவர் பன்னிருவர்; அவருள் தொல்காப்பியர் சிறந்தவர்; தொல்காப்பியத்திற்கு முதனூல் அகத்தியம்' என்னும் பெருங்கதை பலநூற்றாண்டுகளாகவே வழக்காற்றில் வந்துவிட்டது என்பது புலனாகும்.

1. தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், பக்கம் 46

# தொல்காப்பியம்*

காலப் பழமையாலும் புலவர் பாராட்டும் சீர்மையாலும் ஒப்பு உயர்வற்று விளங்குவது தொல்காப்பியம் என்னும் பெரு நூலாகும். இந்நூலே தமிழரின் நாகரிகச் சிறப்பிற்கும் தமிழின் பெருமைக்கும் எடுத்துக் காட்டாய் இலங்குகின்றது. கால வெள்ளத்தைக் கடந்து இன்று நமக்குக் கிடைத்திருக்கும் இந்நூல் இலக்கண நூல் என்பதை எண்ணும்போது, இந்நூலுக்கு முன் எத்துணையோ இலக்கிய இலக்கண நூல்கள் தோன்றிச் சிறப் புற்றிருக்க வேண்டும் என உறுதிப்பாடு கொள்கின்றோம். ஆயின் தமிழர்தம் தவக் குறைவால் அந்நூல்கள் தமிழ் உலகிற்குக் கிடைக்கப் பெறவில்லை. எனினும் தொல்காப்பியத்தைக் கொண்டு நம் இலக்கியப் பெருமையையும், முன்னோர் வாழ்ந்த வளமார் நிலையினையும் எடுத்துக் காட்டுகிறோம்.

---

* தொல்காப்பியரால் இயற்றப்பெற்றநூல் தொல்காப்பியம் ஆதலால் தொல்காப்பியம் என்னும் பெயர் ஆகு பெயர் என்பர்; சிலர் தொல்காப்பியம் என்பது பிழைபட்ட பிற்கால வழக்கென்றும் தொல்காப்பியர் என்பதே நூலின் பெயர் என்றும் கூறுவர்.

## தொல்காப்பியர் வாழ்வும் வரலாறும்:

பெயர்க்காரணம்: தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர் ஆவார். இப்பெயர் இவரது இயற்பெயர் என்பர். உரையாசிரியர்கள் தொல்காப்பியன் என்பதற்குப் பழமையான காப்பியக் குடியில் பிறந்தவன், எனப்பொருள் கூறியுள்ளனர். தொல்காப்பியர் காவ்ய கோத்திரத்தில் பிறந்தவராதலால் அடைமொழியுடன் தொல்காப்பியர் எனப் பெயர் பெற்றார் என்றும், காவ்ய குலத்தில் பிறந்தவராதலால் தொல்காப்பியர் என்று பெயர் பெற்றார் என்றும் கூறுவர்.[1] இக்கருத்துக்கள் ஏற்கத் தக்கன அல்ல என்பதைத் தமிழ் இலக்கிய வரலாற்றில்[2] கண்டு கொள்க. தொல்காப்பியரைப் பற்றிய கதையொன்றினைத் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாயிர உரையில் நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். இக்கதையில் தொல்காப்பியரது இயற்பெயர் திரண தூமாக்கினி என்றும், அவர் தந்தையார் பெயர் ஜமதக்கினி என்றும் காணப்படுகின்றன. இக்கதையில் பல ஐயங்கள் இருப்பதால் இக்கதையினை ஆராய்ச்சியாளர் ஏற்றுக் கொள்வதற்கு இல்லை.

## அகத்தியர் மாணவர்:

அகத்தியர் மாணவர் பன்னிருவருள் தொல்காப்பியரும் ஒருவர் என்பது முன்பே கூறப்பட்டது. இப்பன்னிருவருள் ஒருவராகிய பனம்பாரனாரே தொல்காப்பியத்திற்குப் பாயிரம் செய்தவராவார். தொல்காப்பியர், தொல்காப்பியம் செய்தது மட்டுமன்றிப் பன்னிரு படலத்தில் உள்ள வெட்சிப் படலத்தையும் செய்தார் என்பர். இளம்பூரணர், பன்னிருபடலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியர் செய்ததன்று என்று காரணம் காட்டி மறுத்துள்ளார்.[3] ஆனால் சிவஞான முனிவர், வெட்சிப் படலம் தொல்காப்பியர் செய்ததே எனத் தம் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியில் கூறியுள்ளார்.[4]

1. மு. இராக

பொருளதிகாரம் அகவாழ்வும், புறவாழ்வும் பற்றி விரிவாகப் பேசுகின்றது. பிறமொழிகளில் எழுத்தும் சொல்லும் பற்றியே இலக்கணம் உண்டு. ஆனால் தமிழில் சொல்லால் அமையும் பொருளுக்கும் இலக்கணம் கண்டனர். இப்பகுதியில் இலக்கியத்தில் அமைய வேண்டிய அக வாழ்விற்கும் புறவாழ்விற்கும் இலக்கணம் அமைக்கின்றார். செய்யுளைப் பற்றி விரிவாக ஆய்கின்றார். உள்ளத்தே தோன்றும் உணர்ச்சிகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை மெய்ப்பாட்டியலில் உணர்த்துகின்றார். தமிழின் அடிப்படை மரபுகளை மரபியலில் கூறுகின்றார்.

## தொல்காப்பியத்தின் சிறப்பு:

தொல்காப்பியத்தின் சிறப்பும் சீர்மையும் காலம் கடந்தன. தொல்காப்பியம் தமிழகத்தின் பழம் வரலாற்று ஏடு; தமிழின் இயல்பும் ஏற்றமும் உரைக்கும் நற்பனுவல். இந்நூலின் பெருமையினை இன்று சிலர் குறைத்து மதிப்பிடத் தொடங்கியுள்ளனர். மொழியியலும் ஒலியியலும் வளர்ந்து வரும்புதிய இலக்கண விஞ்ஞானக் கலைகளாகும். இக்கலைகளின் நுழை வாயிலிலேயே இன்று பலர் நிற்கின்றனர். இவற்றின் இயல்பும் பிறவும்கூட அறிந்தார் மிகச் சிலரேயாவர். இந்நிலையில் இக்கலைகளைக் கற்போர், வகுப்புக்குள் சென்று, ஒரு மணிநேரம் அமர்ந்து, வெளிவரும் போது தொல்காப்பியர் தவறு செய்து விட்டார் என்ற பல்லவியோடு வருகின்றனர். இவ்வளவுவிரைவில் இவர் களுக்கு எவ்வாறு 'ஞானோதயம்' ஏற்பட்டது என்பது புலனாகவில்லை. என்ன தவறு செய்தார் என்பதையேனும் தமிழில் எழுதி வெளியிடின் இனிவரும் தமிழ் கூறு நல்லுலகமாவது பயன் அடையும். அவ்வாறும் இவர்கள் செய்திலர். இந்திய நாகரிகத்தின் இரு கண்கள் எனக் கருதப்படும் தென்மொழியும் வடமொழியும் இலக்கணப் பழமையுடையன. தென்மொழி இலக்கணத்தினைத் தொல்காப்பியரும் வடமொழி யிலக்கணத்தைப் பாணினியும் மிகத் தெளிவாக விளக்கி இலக்கணம் அமைத்துள்ளனர் என்பது அறிஞர் பலரும் ஒப்பிய முடிபு. இவற்றுள் பாணினியத்தை உலகத்தார் நன்கு புரிந்து போற்றி வருகின்றனர்; ஆய்ந்து வருகின்றனர். தொல்காப்பியத்தையும் உலகப் பேரறிஞர்முன் எடுத்துக் காட்ட வேண்டும். இதனைத் தமிழும் ஆங்கிலமும் கற்ற பேரறிஞர்கள் செய்ய

20

முற்படவேண்டும். அவ்வாறு செய்யின் தொல்காப்பியத்தின் பெருமைகளைப் புறவுலகும் காண வாய்ப்பு நேர்ந்து, தொல்காப்பியத்தின் சிறப்பியல்புகளை ஓரளவு காண்போம்.

1. தொல்காப்பிய நூற்பாக்கள் மிக எளிமையுடையன. படிப்போர் இலக்கணச் சூத்திரங்களைப் படிக்கின்றோம் என எண்ணாமல், இலக்கியச் சோலைக்குள் புகுகின்றோம் என்று எண்ணுமாறு செய்கின்றன.

2. தொல்காப்பியம் விரிந்துபட்ட இலக்கணம். சுருங்கச் சொல்வதனால் கற்போரின் அறிவை ஈர்க்கலாம். ஆனால் விரிவில் ஏற்படும் விளக்கமும் தெளிவும் சுருங்கச் சொல்வதில் ஏற்படுவதில்லை. இதனால் தொல்காப்பிய விரிவு படிப்போர் மதியை மருட்டாமல் மலர்ச்சியே தருகின்றது.

3. தொல்காப்பியம் தலைமைச் சிறப்புடையது, தாய்மைப் பண்பு கொண்டது. தலைமை என ஒன்றிருந்தால் அதனைப் பின்பற்றிச் செல்லும் சங்கிலித் தொடர் ஒன்று உருவாக வேண்டும். நல்ல தலைவன் தனக்குப்பின் தன் பெயர் சொல்லும் பெற்றியுடையாரைப் பிறப்பிக்க வேண்டும் என்பர். இத்தலைமை இலக்கணம் தொல்காப்பியருக்கு மிகமிகப் பொருந்தும். தொல்காப்பியத்தின் வழித் தோன்றியனவே பின் வந்த இலக்கியங்கள் எல்லாம். சங்க இலக்கியங்களில் தொல்காப்பிய ஆட்சி உயர்ந்து நிற்கிறது. திருக்குறளில் காமத்துப்பாலும், பொருட்பாலும் பல அதிகாரங்களும் தொல்காப்பியப் பற்றுக் கோடு உடையன. தொல்காப்பியம் கற்றபின் திருக்குறளைக் கற்பார் பெறும் அறிவு வேறு; அதனைக் கல்லாது திருக்குறளைக் கற்பார் அறிவு பிறிது எனநாம் உணர வேண்டும் என்பர் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் அவர்கள். தொல்காப்பியம் புறத்திணையியல் வஞ்சிக் காண்டமாக வடிவெடுத்து நிற்கக் காண்கிறோம். தொல்காப்பியத் தாய்மை ஊற்றே தமிழ் இலக்கியங்களில் பரவி நிற்கின்றது என்பது இலக்கிய வளர்ச்சியினை ஆராய்வார்க்கு விளங்காமல் போகாது.

(4) தொல்காப்பியம் மொழிக்கலையின் மூலங்கள் நிறைந்த நூல். பேச்சு வழக்கும் செய்யுள் வழக்கும் ஆராய்ந்து வெளிப்படுத்திய முதல் நூல். மொழி வளரும்; மாறும் என்பதனை அறிந்து 'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே' எனச் சொன்ன முன்னூல். தொல்காப்பியன் ஒரு மொழியறிஞன் என்பதற்கு இவ்வுண்மை இவரது உயர்வுக்கும் காலம் கடந்த புலமைக்கும் எடுத்துக்காட்டாகும்.

# இறையனார் அகப்பொருள்

இறையனார் அகப்பொருள் என்னும் இந்நூல் அகப்பொருள் இலக்கணம் கூறுகின்றது. இறையனார் இயற்றியதாதலால் இந்நூல் இறையனார் அகப்பொருள் எனப்பெயர் பெற்றது. அகப்பொருள் இலக்கணத்திலும் களவு இலக்கணத்தை மிகுத்துக் கூறுவதனால் இந்நூல் இறையனார் களவியல் எனவும் பெயர் பெறும்.

## இறையனார்:

இறையனாரை மதுரை ஆலவாய்ச் சோமசுந்தரக் கடவுள் என்று கூறுவர். இந்நூலின் உரை, 'இந்நூல் செய்தார் யாரோ எனின், மால்வரை புரையும் மாடக் கூடல் ஆலவாயில் பால்புரை பசுங்கதிர்க் குழவித் திங்களைக் குறுங்கண்ணி யாகவுடைய அழலவிர் சோதி அருமறைக் கடவுள்' எனச் செப்புகின்றது. களவியல் நூல் இறைவனால் இயற்றப் பெற்றது என்னும் இக்கொள்கை, இடைக்காலத்தில் வாழ்ந்த பெரியோர் எல்லோராலும் உடன்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

என்னும் இக்கொள்கையை உலகியலில் நின்று ஆராய் வார்க்கு, இறையனார் களவியல், தொல்காப்பியப் பொருளதிகாரத்தைக் கற்று வல்ல புலவரொருவரால் அகப் பொருள் இலக்கணத்தைச் சுருக்கமாகக் கூறும் கருத்துடன் இயற்றப்பெற்றதே என்னும் மெய்ம்மை விளங்காமல் போகாது! இந்நூலாசிரியராகிய இறையனார், கடைச்சங்கப் புலவராகிய நக்கீரனாருக்குக் காலத்தால் சிறிது முற்பட்டவராக இருத்தல் வேண்டும் என்பர். குறுந்தொகையில் உள்ள, 'கொங்கு தேர் வாழ்க்கை' என்னும் செய்யுளைப் பாடிய, இறையனார் எனப் பெயர்பெற்ற கடைச்சங்கப் புலவரே இந் நூலாசிரியராய் இருத்தல் கூடும்.

## காலமும் சமயமும் :

கடைச் சங்கப் புலவர் நக்கீரருக்குச் சிறிது முற்பட்டவர் எனக் கொள்ளின் கி.மு. முதல் அல்லது கி.பி. முதல் நூற்றாண்டு இவர் காலம் எனக் கூறலாம். இவர் சைவர் என்பது கூறாமலே விளங்கும்.

## களவியலின் தோற்றம்:

'ஒரு காலத்தில் பாண்டிய நாடு பன்னீராண்டு பஞ்சத்தால் வாடியது. அரசன் அறிஞர்களையெல்லாம் வளமுள்ள நாட்டுக்கு அனுப்பிவிட்டான். பஞ்சம் தீர்ந்தது. அரசன் நான்கு பக்கங்களிலும் ஆள் அனுப்பி அறிஞர்களை அழைத்துவரச் செய்தான். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், யாப்பதிகாரம் வல்ல புலவர்களே கிடைத்தனர். பொருளதிகாரம் வல்ல புலவர்கள் கிடைக்கவில்லை. அரசன் உளம் வருந்தினான். இதனையறிந்து மதுரை இறைவன் களவியல் செய்தான்.' இவ்வாறு இந்நூல் உரை கூறுகிறது.

## நூல் அமைப்பும் இயல்பும்:

இந்நூல் களவியல் கற்பியல் என்னும் இரண்டு பிரிவுகளை யுடையது. களவியலில் 33 நூற்பாக்களும் கற்பியலில் 27 நூற்பாக்களுமாக 60 நூற்பாக்களையுடையது. தொல்காப்பியர் அகப்பொருள் இலக்கணம் விரிவாகக்கூற, இவர் சுருங்கக்

# புறப்பொருள் வெண்பாமாலை

புறப்பொருள் இலக்கணத்தினை விரித்துக் கூறும், நூல் புறப்பொருள் வெண்பாமாலையாகும். கைக்கிளைப் படலம் நீங்கலாக ஏனைய பகுதிகளில் உள்ள இலக்கியச் செய்யுட்கள், வெண்பா யாப்பில் அமைந்துள்ளன. கைக்கிளைப் படலச் செய்யுட்கள் மருட்பாக்களாக உள்ளன. இந்நூல், புறப்பொருள் இலக்கணத்தினை வெண்பா யாப்பில் அமைந்த செய்யுட்களால் மாலைபோலத் தொடுத்துச் சொல்வதால், புறப்பொருள் வெண்பாமாலை எனப்பெயர் பெற்றது. இந்நூல், பெரும்பாலும் வெண்பாமாலை என்றே வழங்கப்படும்.

நூலாசிரியர் : இந்நூலின் ஆசிரியர் ஐயனாரிதனார். இவர் சேரர் பரம்பரையில் வந்தவர். ஆயினும், சோழ பாண்டியர் களையும் ஒப்பச் சிறப்பிக்கும் உள்ளத்தர். இவர் சைவ சமயத்தினர். இது, இந்நூற் கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள், விநாயகப் பெருமானையும், சிவபெருமானையும் பற்றியனவாக இருத்தலால் புலனாகும். என்றாலும் இவர் வைணவத்தையும் சைவத்தையும் ஒப்ப நோக்கும் நடுநிலையாளர் என்பது இவரது நூலால் விளங்கும். ஐயனாரிதனார் என்பது திருவிடைக் கழியைச் சார்ந்த குராஞ்சேரியிலுள்ள

கூறுவர்.

**உரையாசிரியர் :**

இந்நூலுக்கு ஒரு பழைய உரை உள்ளது. இவ்வுரையாசிரியர், ஜயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கா நாட்டு மாகறலூர் கிழார் சாமுண்டிதேவநாயகர் என்பவர் ஆவர். இவர் பெயரினை நோக்கும்போது இவர் வேளாண் மரபினர் என்று தெரிகின்றது. இவர் ஊர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கா நாட்டு மாகறலூர் என்பதும் புலனாகின்றது. இவரது உரைப்போக்கிலிருந்து இவர் வைணவர் என்று விளங்குகின்றது. 'மாயவன் மாயம்' (228) என்னும் வெண்பாவில் மாயவன் என்பதற்கு, வைணவ மரபுப்படி கரியவன் என்று பொருள் எழுதியுள்ளார். பரிமேலழகரும் பரிபாடலில் 'மாயோன்' என்பதற்கு இப்பொருளே கொண்டார்! சாமுண்டிதேவநாயகர் காலம் யாது என்று அறுதியிட்டுக் கூற இயலவில்லை. சிலர் கி.பி. 13, அல்லது 14-ம் நூற்றாண்டினராக இருக்கலாம் என்பர்.

இவ்வுரை பதவுரையாக மட்டும் அமைந்துள்ளது. கொண்டு கூட்டிப் பொருள் எழுதப்படவில்லை. பெரும்பாலும் வடசொற்கள் பயின்றதாக உள்ளது. இலக்கணக் குறிப்புக்களும் மிகுதியாக இல்லை. இவ்வுரையின்றேல் இந்நூலின் பொருள் நன்கு புலப் படாது. இவ்வுரையினை நோக்கும்போது இவ்வுரைக்கு முன்பும் உரை இருந்தது என்று புலனாகின்றது.[2] இவர் உரை பதவுரையே ஆயினும் இ...

வேண்டும்.

## 1. வெட்சித்திணை:

பகைவருடைய பசுக்களைக் கவர்தல். போர் தொடங்கப் போவதற்கு முன் அறிகுறி. 19 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 20 கொளுக்களும் 21 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் இரண்டு வெண்பாவும் திணையை விளக்குவன.

## 2. கரந்தைத்திணை :

பகைவர் கவர்ந்த பசுக்களை, பசுக்களுக்குரியார் மீட்க வருதல். 13 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 14 கொளுக்களும் 14 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

## 3. வஞ்சித்திணை:

பகைவருடைய நாட்டைக் கொள்ள நினைந்து போர் செய்தற்குப் படையெடுத்துச் செல்லுதல். 20 துறைகளை

யுடையது. ஒரு சூத்திரமும் 25 கொளுக்களும் 25 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

### 4. காஞ்சித்திணை :

படையெடுத்து வந்த அரசனை எதிர்ப்பதற்குச் செல்லுதல். 21 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 25 கொளுக்களும் 25 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள், ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

### 5. நொச்சித்திணை :

கரந்தையரசன் தம்மதிலைக் காத்துக் கொள்ளுதல். 8 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 9 கொளுக்களும் 9 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

### 6. உழிஞைத்திணை :

பகைவருடைய மதிலை வெட்சியான் வளைத்துக் கொள்ளுதல். 28 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 32 கொளுக்களும் 32 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

### 7. தும்பைத்திணை :

பகைவரோடு போர் செய்தல். 23 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 28 கொளுக்களும் 28 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

### 8. வாகைத்திணை:

பகைவரை வெல்லுதல்; வெற்றி; 32 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 34 கொளுக்களும் 34 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

## 9. பாடாண்திணை :

ஒருவனுடைய கீர்த்தி, வலி, கொடை, தண்ணளி முதலியவற்றை ஆராய்ந்து சொல்லுதல். 47 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 51 கொளுக்களும் 51 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

## 10. பொதுவியல் :

மேற்கூறிய புறத்திணைகட்கு எல்லாம் பொதுவாயுள்ளனவும் அவற்றில் கூறாதொழிந்தனவுமாகிய இலக்கணங்களைக் கூறுவது. நான்கு பகுதிகளையும் நான்கு சூத்திரங்களையும் 37 துறைகளையும் உடையது. 45 கொளுக்களும் 45 வெண்பாக்களும் உள்ளன.

## 11. கைக்கிளைத்திணை :

ஒருதலைக்காமம்; ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என்னும் இரண்டு பகுதிகளையுடையது. 2 சூத்திரங்களும் 19 துறைகளும் 21 கொளுக்களும் 21 வெண்பாக்களும் உள்ளன.

## 12. பெருந்திணை :

பொருந்தாக் காமம்; ஆண்பாற் கூற்று, இருபாற் பெருந்திணை என்னும் இரண்டு பகுப்புக்களை யுடையது. 2 சூத்திரங்களும், 36 துறைகளும் 37 வெண்பாக்களும் உள்ளன.

## 13. ஒழிபு :

பாடாண் பகுதியிலும், வாகையிலும் கூறப்படாதொழிந்த புறத்துறைகளைப் பற்றி விளக்குவது; ஒரு சூத்திரமும் 19 வெண்பாக்களும் உடையது. இது ஒழிபியல் போன்றது. இங்குக் கொளுக்கள் இல்லை.

நூலின் இறுதியில் உள்ள சூத்திரம், புறமும் புறப்புறமும் ஆகிய இரண்டு பிரிவில் 10 திணைகளை அடக்கிக் கூறுகின்றது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை என்பன புறம் எனவும், வாகை, பாடாண், பொதுவியல் மூன்றும் புறப்புறம் எனவும் பெயர் பெறும் என்று வகுத்துக் கூறுவர். கைக்கிளை, பெருந்திணை இரண்டும் அகப்புறம் ஆகும்.

# 9

# வீரசோழியம்

தமிழகத்தில் வேற்று நாட்டார் ஆட்சியும், மொழியும், மதங்களும் புகுந்தமையால் ஏற்பட்ட மாற்றங்கள் பல. சிறப்பாக மொழியில் புதுவாழ்வு தோன்றியது. இவ்வாழ்வு மதச் சார்புடையாரால் மக்களிடை பரவியது. ஓரளவு இலக்கிய உலகிலும் நிலைபெற்றது. இதனால், இலக்கண ஆசிரியர்கள் மொழியின் நிலைகண்டு, புதிய விதிகள் வகுக்க வேண்டிய பொறுப்புடையர் ஆயினர். இச் சூழ்நிலையில் எழுந்த இலக்கண நூலே வீரசோழியம்.

## நூலாசிரியர்:

இந்நூல் இயற்றியவர் புத்தமித்திரனார் என்னும் புலவர் பெருமான் ஆவர். இவர் பொன்பற்றி என்னும் ஊரினர். 'பொன்பற்றி மன் புத்தமித்திரனே' என்னும் இந்நூற்பாயிரம் இதற்குச் சான்று தரும். இவ்வூர், மிழலைக் கூற்றத்தினைச் சார்ந்தது என்பது, 'எழில மிழலைக் கூற்றத்துப் பூண்டி புகழ்ப

1. வீரசோழியம், பாயிரம், செய்யுள். 1.

உள்நாடே என்பதனைச் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் 'மிழலை நாடும் மிழலைக் கூற்றமும்' என்னும் கட்டுரையில்[3] தெளிவாக விளக்கியுள்ளார். இம் மிழலைக் கூற்றத்தினைச் சிறப்பித்துச் சர்க்கரைப் புலவர் வழியில் வந்த சர்க்கரை முத்து முருகப் புலவர் என்பார் மிழலைச் சதகம் என்ற நூலொன்று பாடியுள்ளார். இக் கூற்றத்தினைச் சார்ந்த பொன்பற்றி எனக்கூறும் இவ்வூர், இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கித் தாலுகாவில் உள்ள பொன்பேத்தியே ஆகும். பொன்பற்றியே பொன் பேத்தி என மருவி வழங்கப்படுகிறது. இந்நூலாசிரியர், பொன்பற்றி காவலன் எனக் குறிக்கப் பெறுவதால், இந்நகரில் இருந்த சிற்றரசராக இவரைக் கருதலாம்

வீரராசேந்திர சோழன் விரும்பிய வண்ணம், புத்தமித்திரனார் ஐந்து இலக்கணமும் அடங்கிய நூல் ஒன்று இயற்றி, அதனைச் சோழ மன்னன் பெயரால் வீரசோழியம் எனப் பெயரிட்டார். இதனை,

'தேமேவிய தொங்கல் தேர்வீர சோழன் திருப்பெயரால்
பூமே லுரைப்பன் வடநூல் மரபும் புகன்று கொண்டே'

என இந்நூற்பாயிரம் உணர்த்துதலால் அறிக. இந்நூல் கட்டளைக் கலித்துறை யாப்பால் அமைந்தமையால் "வீரசோழியக் காரிகை" எனவும் பெயர் பெறும்.[4]

# நேமிநாதம்

**நேமிநாதம்:**

இந்நூல் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் உணர்த்தும் நூலாகும். இந்நூல், தென்மயிலாபுரி நீனிறக் கடவுள் நேமிநாதர் தம் திருப்பெயரால் செய்தமைத்தமையால் நேமிநாதம் எனப் பெயர்பெற்றது என்பர். நேமிநாதர் என்பவர் சமணர்கள் போற்றும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுள் இருபத்திரண்டாவது தீர்த்தங்கரர் ஆவார். இவரைச் சமணர்கள் மிகவும் போற்றி வணங்கினர். பல இடங்களில் கோயிலும் எடுத்தனர். மயிலையில் எழுப்பிய ஐந்து ஜைன திருக்கோயில்களுள் நேமிநாதருக்கும் ஒரு திருக்கோயில் எடுத்தனர். நேமிநாதர் வரலாறு ஸ்ரீபுராணம், ஜைன ஹரிவம்சம் ஆகிய இந்நூல்களில் கூறப்பட்டுள்ளது. அவிரோதி யாழ்வார் என்பவர் இவர்மேல் திருநூற்றந்தாதி என்னும் நூலொன்று பாடியுள்ளார். மேலும் திருவெம்பாவையும் பாடப்பெற்றுள்ளது. நேமிநாதரை மயிலைநாதர் எனவும் கூறுவர். இந்நேமிநாதர் பெயராலேயே இந்நூல் நேமிநாதம் என அமைந்துள்ளது.

கூ. 8,

**நூலாசிரியர்:**

இந்நூல் இயற்றியவர் குணவீரபண்டிதர்; களந்தை என்னும் ஊரினர். இவர் இவ்வூரினர் ஆதலை,

'கற்றவர் புகழும் களந்தையென் பெரும்பதிக்
குற்றமில் வாய்மைக் குணவீர பண்டிதன்'

என வெண்பாப் பாட்டியல் பாயிர உரை கூறுதலால் அறியலாம். களந்தை என்பது களத்தூர் என்பதன் மரூஉ மொழியாகும் என்பர். களத்தூர், தொண்டை மண்டலத்தைச் சார்ந்த கோட்டங்கள் இருபத்துநான்கனுள் ஒன்று ஆகும். இவர் தொண்டை மண்டலத்தவர் என்பது,

சின்னூல் உரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும் (32)
மன்னூ புரத்திரு அன்னமின் னேதொண்டை மண்டலமே

என்னும் தொண்டைமண்டல சதகத்தானும் வலியுறும். இவ்வூர் காஞ்சிபுரத்திற்குத் தென்கிழக்கில் முப்பது மைல் தொலைவில் உள்ளது என்பர். இவர் பெயர், ஊர்ப் பெயருடன் சேர்ந்து களந்தைப் பதிக் குணவீர பண்டிதர் எனவும் வழங்கப்பெறும். நேமிநாதம் பாடியதால் இவருக்கு நேமிநாதர் என்ற பெயரும் உண்டு. தமிழ் நாவலர் சரிதை யிலிருந்து பேராசிரியர் என இவர் வழங்கப்பெற்றார் எனவும் அறிகிறோம்.

இந்நூலாசிரியரே வச்சணந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியலும் செய்தவர் ஆவர். இவருடைய ஆசிரியர் வச்சணந்தி முனிவர் ஆவர். இவரும் களந்தை நகரில் வாழ்ந்த அறிஞர். இச்செய்தி, 'வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன்' என்பதனால் பெறப்படுகின்றது. இதனால் ஆசிரியரும் மாணவரும் ஒரே ஊரினர் என்பது புலனாகும். முனிவர் என்பதால் இவர் துறவி போலும் இவரும் சமணரே என்பது இவர் பெயரால் தெரிகின்றது. குணவீர பண்டிதர், தம் ஆசிரியராகிய இவர்மீது ஆராக் காதல் கொண்டவர் என்பது, தாம் எழுதிய நூலுக்கு வச்சணந்திமாலை எனப் பெயர் வைத்தமையால் அறியப்படும்.

இந் நூலாசிரியர் சமணமதத்தினர். இது இந்நூலின் பெயராலேயே இனிது விளங்கும். இன்னும் நேமிநாதத்தில்

உள்ள எழுத்ததிகாரத்தின் முதலிலும்,' சொல்லதிகாரத்தின் முதலிலும்,[2] வெண்பாப் பாட்டியல் முதலிலும்' கூறிய பாயிரங்களாலும் புலனாம்.

## காலம்:

'இந்நூல் யார்காலத்துச் செய்ததோ எனின்,

"குருத்தவா மணிமுடிக் கொற்றவர் கோமான்
திருத்தகு மணிமுடித் திரிபுவன தேவன்"

என்னும் அரசன் காலத்தில் செய்தது என்று உணர்க' என வெண்பாப் பாட்டியல் பாயிர உரை கூறுகின்றது. இங்குக் குறிக்கப் பெறும் திரிபுவன தேவன் என்பான், திரிபுவன வீரதேவன் எனச் சிறப்புப் பெயர் பெற்ற மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆவான். இவன் காலம் கி.பி. 1178-1218 ஆகும். ஆதலால் இந் நூலாசிரியர் காலமும் இக்காலமாகிய கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதி அல்லது கி.பி. பதின் மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் என்பது தெளிவாம். தமிழ் நாவலர் சரிதையில் 'ஒட்டக் கூத்தர், உலாப் பாடிய போது பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது என ஓர் செய்யுளின் தலைப்பு அமைந்துள்ளது. இதனைக் கொண்டு, ஒட்டக் கூத்தரும் திரிபுவன தேவன் காலத்தவராதலால் ஈண்டுக் கூறப்பட்ட நேமிநாதர் என்பார் நேமிநாதம் செய்த குணவீர பண்டிதரோ என ஊகிக்கப் படுகின்றார் என்பர் ரா. இராகவையங்கார் அவர்கள். இதனாலும் குணவீர பண்டிதர், மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தவர் என்பது வலிவு பெறும். இம் மன்னனால் ஆதரிக்கப் பெற்ற புலவர் பெருமக்களுள் குணவீர பண்டிதரும் ஒருவர் என்பர் பண்டாரத்தார் அவர்கள்.

## நூல் அமைப்பு:

நேமிநாதம் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்னும் இரண்டு பிரிவுகளை உடையது. எழுத்ததிகாரத்தில் 24 பாக்களும், சொல்லதிகாரத்தில் 71 பாக்களும் உள்ளன. இவை நீங்கலாக எழுத்ததிகாரத்தில் பாயிரச் செய்யுள் ஒன்றும் அவையடக்கச் செய்யுள் ஒன்றும் சொல்லதிகாரத்தில் பாயிர

...மின்மேல் வந்தருளும் புங்கவன்...

செய்யுள் ஒன்றும் ஆக மூன்று செய்யுட்கள் உள்ளன. எனவே இந் நூலில் 97 பாக்கள் காணப்படுகின்றன. இவையே யன்றித் தற்சிறப்புப் பாயிரமாக இரண்டு வெண்பாக்களும் உள்ளன.

எழுத்ததிகாரம் உட்பிரிவுகள் இன்றி ஒன்றாக அமைந்துள்ளது. சொல்லதிகாரம் ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது; இவ் ஒன்பது உட்பிரிவுகளும் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தினைப் பின்பற்றியே அமைந்துள்ளன. இதனைப் பிற்வரும் பட்டியலில் காண்க.

| தொல். சொல். | நேமி. சொல். |
| --- | --- |
| 1. கிளவியாக்கம் | 1. மொழியாக்க மரபு |
| 2. வேற்றுமையியல் | 2. வேற்றுமை மரபு |
| 3. வேற்றுமை மயங்கியல் | 3. உருபு மயங்கியல் |
| 4. விளிமரபு | 4. விளிமரபு |
| 5. பெயரியல் | 5. பெயர் மரபு |
| 6. வினையியல் | 6. வினைமரபு |
| 7. இடைச் சொல்லியல் | 7. இடைச் சொன்மரபு |
| 8. உரிச் சொல்லியல் | 8. உரிச்சொன் மரபு |
| 9. எச்சவியல் | 9. எச்சமரபு. |

இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்தது. இலக்கண நூல்களில் சூத்திரம் நூற்பாவால் (ஆசிரிய யாப்பால்) அமைந்திருக்க இங்கு மட்டும் வெண்பாவால் அமைவானேன் என ஐயம் எழுதல் கூடும். பேராசிரியர், தொல்காப்பிய மரபியல் உரையில் (சூத்திரம். 100) 'ஆசிரியத்தானும் வெண்பா வானும் செய்யப்படும் சூத்திரம்' என்று கூறுகின்றார். இதனால் வெண்பாவால் இயன்றதும் இலக்கண வல்லுநர்களுக்கு உடன்பாடே என்பது பெற்றாம். இந்நூலில் பல இடங்களில் மகடூஉ முன்னிலை யாக்கிக் கூறும் மரபு காணப்படுகின்றது.

# 13

# நன்னூல்

தொல்காப்பியம் தமிழ் நாகரிகத்தின் கலங்கரை விளக்கம்; வரலாற்றின் பிறப்பிடம்; பெருநூல். இந்நூலினைப் பின்பற்றி எத்துணையோ இலக்கணங்கள் தோன்றின; இலக்கியங்கள் எழுந்தன. தோன்றிய இலக்கணங்களுள் தொல்காப்பியம் போலக் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லாமல் நின்று நிலவும் நீர்மையுடையது நன்னூலாகும். நன்னூல் அறியாதவர் எந்நூலும் அறியாதவரேயாவர். இன்று உயர்நிலைப் பள்ளி முதலே நன்னூல் கற்பாரின் உள்ளத்தே குடிபுகத் தொடங்கி விடுகிறது. இந்நூலினைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைப் பார்ப்போம்.

## நூலாசிரியர்:

பெருமை பெற்ற இந்நன்னூலை அளித்த பேராசான் பவணந்தி முனிவர் ஆவார். சைன சமயத்தில் துறவிகளை நந்தி என அழைத்தல் மரபாகும். இதனை அச்சணந்தி வச்சணந்தி முதலிய [illegible] வழக்குக்களால் அறியலாம்.

'கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியும் குமணமா
சுனகநந்தியும் குனகநந்தியும் திவணநந்தியும் மொழிகொளா
அனகநந்தியர் மதுமொழிந்தவ மேதவம் புரிவோமெனும்
சினகருக்கெளி யேன் அலேன்திரு வாலவாய்அரன் நிற்கவே'

என்னும் தேவாரத்தாலும் இக் கருத்து வலியுறும். இவர் சமணர்,

'பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னரும் சிறப்பிற் பவணந்தி'

என இந்நூற் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. இதனால் இவர் ஊர் சனகை என்பது பெறப்படும். சனகை என்பது சனநாதபுரத்தின் மரூஉ என்பர் மயிலை நாதர். இப் பெயருடைய ஊர்கள், தென்னாட்டில் நான்கிற்கு மேல் உள்ளன என்பர். து.அ. கோபிநாதராவ் அவர்கள்.[1]

தொண்டை மண்டல சதகம், பவணந்தியைத் தொண்டை நாட்டினர் என்று கூறுகின்றது; கொங்கு மண்டல சதகம் கொங்கு மண்டலத்தவர் என்று குறிப்பிடுகின்றது. இவற்றுள் கொங்குமண்டலத்தில் உள்ள சனநாதபுரமே இவரது ஊர் என்பது. இவ்வூர் மைசூர் மாவட்டத்தில் உள்ளது.

இவரது ஆசிரியர் சன்மதி முனிவர் ஆவார். ஆசிரியரை ஞானபிதா என்றும் மாணவனை ஞானபுத்திரன் என்றும் வழங்குதல் மரபு ஆதலால் இம் மரபு பற்றி, சன்மதி முனியருள் பவணந்தி எனப் பாயிரம் கூறுகின்றது. சைன சம்பிரதாயத்தில் இம் மரபு இன்றும் உண்டு என்பர்.

**காலம்:**

சீயகங்கன் வேண்ட நன்னூல் பவணந்தியால் இயற்றப்பட்டது எனப் பாயிரம் கூறுகின்றது. இச் சீயகங்கன் என்பான், மூன்றாம் குலோத்துங்க சோழனுக்குக் கப்பம் செலுத்திக் கொண்டு கங்க நாட்டில் அரசாண்ட குறுநில மன்னன் ஆவான். மூன்றாம் குலோத்துங்க சோழன் காலம் கி.பி. 1178-1218 ஆகும். எனவே பவணந்தியார் காலமும் இக்காலமாகிய கி.பி. 12-ம் நூற்றாண்டின் இறுதியும் கி.பி. 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியும் என்பது தெளிவாகும்.

1. செந்தமிழ், தொகுதி 5

எழுத்தும், [illegible] களை [illegible] ங்களே;

## நூல் அமைப்பு:

இந்நூலின் முன் சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்று உள்ளது. இதனையடுத்து, பொதுப்பாயிரம் உள்ளது. இப்பாயிரத்தில் 56 நூற்பாக்கள் உள்ளன. இவற்றுள் சில இறையனார்களவியல், இளம்பூரணர் உரை முதலியவற்றில் காணப்படுகின்றன. இப்பாயிர நூற்பாக்கள் பவணந்தியார் செய்தது அன்று என்பர்.[1]

இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு பிரிவுடையது. எழுத்ததிகாரத்தில் ஐந்து இயல்களும், சொல்லதிகாரத்தில் ஐந்து இயல்களும் உள்ளன.

**எழுத்ததிகாரம்**

| | | |
|---|---|---|
| 1. எழுத்தியல் | நூற்பா | 72 |
| 2. பதவியல் | ,, | 23 |
| 3. உயிரீற்றுப் புணரியல் | ,, | 53 |
| 4. மெய்யீற்றுப் புணரியல் | ,, | 36 |
| 5. உருபு புணரியல் | ,, | 18 |
| | | 202 |

**சொல்லதிகாரம்**

| | | |
|---|---|---|
| 1. பெயரியல் | ... | 62 |
| 2. வினையியல் | ... | 32 |
| 3. பொதுவியல் | ... | 68 |
| 4. இடையியல் | ... | 21 |
| 5. உரியியல் | ... | 21 |
| | | 204 |

இந்நூலில் உள்ள மொத்த நூற்பாக்கள் 406 ஆகும். இவற்றுள் தொல்காப்பிய நூற்பாக்கள் ஏழு. பொதுப் பாயிரத்தில் தொல்காப்பியனார் இயற்றிய நூற்பாக்கள் இரண்டும் உள்ளன. நூற்பாக்கள் ஆசிரிய யாப்பில் அமைந்தன.

## நூலின் மறுபெயர்கள்:

நன்னூலினைப் பின்னூல் என்று கூறுவர். தொல்காப்பியம் தொன்னூல் ஆனமையால் இது பின்னூல் ஆயிற்றுப் போலும். சிற்றதிகாரம் என்றும் கூறுவர்.

1. [illegible] A.U. Journal Vol. XII. No. 283. P. 140-144.

40

53

## 25

# இலக்கண விளக்கம்

தொல்காப்பியம் போலப் பேரிலக்கண நூல் செய்ய வேண்டும் என்று சிலர் கனவு கண்டார்கள். இக்கனவின் பயனாகச் சில ஐந்திலக்கண நூல்கள் தோன்றின. இவற்றுள் சில நூல்கள் வடமொழி இலக்கணத்தைத் தமிழில் புகுத்த எண்ணிக் காலவெள்ளத்தில் மூழ்கின. மற்றும் சில முன்னூல்களின் தொகுப்பாய் அமைந்து, ஓரளவு மக்கள் மனத்தில் இடம் பெற்றன. இத்தகைய நூல்களுள் இலக்கண விளக்கம் என்றநூலும் ஒன்றாகும்.

**நூலாசிரியர்:**

இந்நூல் இயற்றியவர் வைத்திய நாததேசிகர் என்னும் புலவர் ஆவார். இவர் திருவாரூரினர்; வன்மீக நாததேசிகரின் மைந்தர். அகோர முனிவரின் மாணவர். வைத்தியநாத தேசிகர் திருநெல்வேலி செல்லும் வழியில் கயத்தாற்றில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரது காரிய கர்த்தராக இருந்த திருவேங்கடநாத ஐயரைச் சந்தித்தார். தேசிகரின்

கல்வித்திறமை கண்ட திருவேங்கடநாத ஐயர் தேசிகரைத் தம் மக்களுக்குத் தமிழறிவுறுத்த வேண்டினார். தேசிகரும் ஒப்புக்கண்டு தமிழ் பயிற்றுவித்தார். இலக்கணபாடம் சொல்லி வருகையில் தாம் கற்ற நன்னூலும், சைன முனிவராகிய மயிலைநாதர் செய்த உரையும் பல இடங்களில் தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபடுவது கண்டு, இயன்றவரை நன்னூல் சூத்திரங்களை வைத்துக் கொண்டு வேண்டிய இடங்களில் திருத்தியும், புத்துரை வகுத்தும் பாடம் போதித்து வந்தார். அதுவே நாளடைவில் இலக்கண விளக்கம் எனப் பெயர் பெற்றது என்பர்![1]

இவர் மனைவியார் பெயர் தங்கம் என்பதாகும். இவருக்குச் சதாசிவம், தியாகராஜன், சிதம்பர நாதன், வடுகநாதன், வன்மீகநாதன் என்ற பழனி என ஐந்து புதல்வர்கள் இருந்தனர். இவர்கள் ஐவரும் நன்கு கல்வி கற்று நாடறிந்த நாவலராக விளங்கினர். இவரைப் பற்றிய பிறவரலாற்றுச் செய்திகளைத் 'தமிழ்ப்புலவர்கள் வரலாறு' (17-ம் நூற்றாண்டு) என்னும் நூலில் காண்க.

**காலம்:**

திருவேங்கடநாத ஐயர் கூற இவர் இந்நூலைச் செய்தார். திருவேங்கட நாதர் காலம் திருமலைநாயக்கர் காலமாகிய கி.பி. பதினேழாம் நூற்றாண்டாகும். எனவே இவர்காலமும் கி.பி. பதினேழாம் நூற்றாண்டு என்பது பெறப்படும். மேலும் வைத்தியநாத தேசிகரின் மாணவர் படிக்காசுப் புலவர் என்பர். படிக்காசுப் புலவர், 1678 முதல் 1710 வரை அரசாண்ட இரகுநாத சேதுபதி காலத்தவர். இதனாலும் இவர் கி.பி. பதினேழாம் நூற்றாண்டினர் என்பது வலியுறும்.

**சமயம்:**

இவர் சைவர் : இவரும், திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்த இலக்கணக் கொத்து சாமிநாத தேசிகரும் நெருங்கிப் பழகியவர்கள். இதனாலும் இவரது சமயச் சார்பும் சூழலும் விளங்கும்.

1. ச. தேச

## இயற்றிய பிறநூல்கள்:

இவர் பிரபந்தங்கள் இயற்றுதலில் மிக வல்லவர். இதனை,

"ஓதும் பிரபந்தங்கள் ஒருகோடி நிமிடத்துரைக்கும் ப்ரசண்டவாக்கி"

என்பதனால் அறியலாம். இவர் இயற்றிய பிற நூல்கள் மயிலம்பிள்ளைத் தமிழ், பாசவதைப் பரணி, திருவாரூர்ப் பன்மணிமாலை, நல்லூர்ப்புராணம், திருவாட் போக்கிப் புராணம், கமலாலய அம்மை பிள்ளைத் தமிழ், மெய்ஞ்ஞான விளக்கம் என்னும் தமிழ்ப் பிரபோத சந்திரோதயம் என்பன.

## நூல் அமைப்பும் சிறப்பும்:

இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணமும் கூறுகின்றது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களைக் கொண்டது. 941 நூற்பாக்களை உடையது. ஒவ்வொரு அதிகாரமும் ஐந்து ஐந்து இயல்களால் இயன்றன. இவ்வதிகாரங்களின் உட்பிரிவுகளும் சூத்திரத் தொகையும் பின்வரும் பட்டியலில் காண்க.

### i. எழுத்ததிகாரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | எழுத்தியல் | நூற்பா | 37 |
| 2 | பதவியல் | நூற்பா | 15 |
| 3 | உயிரீற்றுப் புணரியல் | நூற்பா | 66 |
| 4 | மெய்யீற்றுப் புணரியல் | நூற்பா | 29 |
| 5 | உருபு புணரியல் | நூற்பா | 11 |
| | | | 158 |

### ii சொல்லதிகாரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயரியல் | நூற்பா | 68 |
| 2 | வினையியல் | நூற்பா | 24 |
| 3 | இடைச்சொல்லியல் | நூற்பா | 29 |
| 4 | உரிச் சொல்லியல் | நூற்பா | 15 |
| 5 | பொதுவியல் | நூற்பா | 78 |
| | | | 214 |

பொருளதிகாரம்: 220

| | | | |
|---|---|---|---|
| 1 | அகத்திணையியல் | நூற்பா | 21 |
| 2 | புறத்திணையியல் | நூற்பா | 90 |
| 3 | அணியியல் | நூற்பா | 51 |
| 4 | செய்யுளியல் | நூற்பா | 181 |
| 5 | பாட்டியல் | நூற்பா | |
| | | | 569 |

இவையே யன்றி நூலுக்குமுன் சிறப்புப் பாயிரம் ஒன்று அமைந்துள்ளது. இதனை இயற்றியவர் வைத்திய நாத தேசிகரின் மகன் சதாசிவ நாவலர் ஆவார். நூலின் இறுதியில் பதிகம் ஒன்று காணப்படுகின்றது. இப்பதிகம் பாடியவர் வைத்திய நாத தேசிகரின் பேரன் (பெயரன்) வைத்தியநாத தேசிகன் ஆவார். இப்பதிகத்தால் இந்நூல் மூவரால் செய்யப் பட்டது என்பது தோன்றுகின்றது என்று கூறுவர். இப்பதிகத்தில்,

......"இலக்கண விளக்கம் என்ன
நாட்டினன் வைத்தியநாத தேசிகன்
அன்னவன் தவத்தினால் அவதரித்த
முன்னவன் பாயிரம் மொழிந்து சொல்லணியும்
தற்பவ முதல் மூன்றில் படநாடிப்
பகர்ந்தனன்; இளவல் பன்னூலும் ஆராய்ந்து
உகந்து, தொல்காப்பியத்து உண்மை தோன்ற
ஐந்தியலும் தன் புந்திசான்றாகத்
தந்தை முன்னுரைத்த நூல்தான் முடிபெய்த
அந்த ணாரூர்ச் சந்திர மௌலி
அருளுட் கொண்டு மருள்மனம் நீங்கிப்
புலங்கொளப் பாட்டியல் இலங்க உரைத்தனன்
வாய்மைதரு தியாக ராய தேசிகனே"

எனக் கூறப்பட்டுள்ளது. இதனால், வைத்தியநாத தேசிகர் இலக்கண விளக்கம் செய்தார்; அவரது மூத்தமகனார் சதாசிவநாவலர் பாயிரமும் சொல்லணி பற்றிய நூற்பாக்களும் செய்தார்; வைத்திய நாத தேசிகரின் மற்றொரு மகனாராகிய தியாகராய தேசிகர் பாட்டியல் இயற்றினார் என்பது பெறப்படுகின்றன.

# தொன்னூல் விளக்கம்

தமிழினைத் தமிழர்கள் மட்டும் வளர்க்கவில்லை. இந்தியாவில் உள்ள பிறமொழியாளர்களும், வேற்று நாட்டிலிருந்து வந்தவர்களும் வளர்த்துள்ளார்கள். சங்க காலத்தில் கபிலரால் தமிழ் அறிவுறுத்தப்பட்ட ஆரிய அரசன் பிரகத்தன், தமிழ்ப்பாட்டு எழுதும் அளவிற்குத் தக்க புலமை பெற்றான் என அறிகிறோம். இவ்வாறே பிற்காலத்தும் வெளிநாட்டவர்கள் இங்கு வந்து தமிழினைக் கற்றுப் பாடிச் சிறந்து விளங்கினார்கள். மேலும் தமிழுக்கு இலக்கணம் செய்யவும் முற்பட்டு அத்துறையிலும் புகழ் பெற்றார்கள். இத்தகைய தமிழ்த்தொண்டுகளில் முன்னின்றவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் கிறித்தவர்கள் ஆவார்கள். இவர்களுள் வீரமா முனிவர் போற்றுதற்கு உரிய புலமையர் ஆவார்.

வீரமாமுனிவர் இத்தாலி தேசத்து வித்தகர்; இவர் காலம் கி.பி. 1680-1747 ஆகும். இவரது இயற் பெயர் கொன்ஸ்டான்ஸ் ஜோசப் என்பதாகும். கொன்ஸ்டான்ஸ் என்பதற்கு பொருள்

தைரியம் என்பர். இவர் சமயப் பணிபுரியத் தமிழகம் வந்த போது தம் பெயரைத் தைரியநாதர் என மாற்றிக்கொண்டார். பின்னர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் இவரது தமிழ்ப் புலமையின் தகைமையினைப் பாராட்டி வீரமாமுனிவர் எனச் செந்தமிழால் செப்பினர். இவருக்குத் தமிழ் அறிவித்த ஆசான் சுப்பிரதீபக் கவிராயர் ஆவார்.

வீரமாமுனிவர் குறளின் நயமும் சிந்தாமணியின் செழுமையும் கம்பனின் கவிநயமும் ததும்பத் தேம்பாவணி என்னும் தித்திக்கும் தமிழ்க் காவியத்தைப் பாடினார். கலம்பகம் பாடிக் களிகொண்டார். பிற்கால அகராதிகளும் அடிப்படையாகச் சதுரகராதி செய்தார். வள்ளுவனின் வாய்மொழியில் அறத்துப்பாலை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். வள்ளுவன் புகழை மேல் நாட்டார்க்குக் காட்டிய முதல்வர் இம் மூலவரே என்பர். பரமார்த்தகுரு கதை படைத்த தமிழ் வாணரும் இவரேயாவர். இத்தகைய புகழ்மிக்க புலமையாளர் செய்த இலக்கண நூலே தொன்னூல் விளக்கம் ஆகும்.

## தொன்னூல் விளக்கம்:

தொன்னூல் பொன்னூலாக இலங்குகிறது என்பர் டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கள். இந்நூல் ஐந்திலக்கணமும் கூறுவது. 'அருந்தமிழ் இலக்கணம் ஐந்தையும் விரித்து விளக்கினன் வீரமாமுனியே' என்பது தொன்னூல் விளக்கப் பாயிரம். இந்நூல் 370 சூத்திரங்களையுடையது. எழுத்ததிகாரம் 3 இயலாகப் பகுக்கப்பட்டு 40 நூற்பாவாலும், செல்லதிகாரம் 12 இயலாகப் பகுக்கப்பட்டு 102 நூற்பாவாலும், பொருளதிகாரம் 13 இயலாகப் பகுக்கப்பட்டு 100 நூற்பாவாலும், அணியதிகாரம் 6 இயலாகப் பகுக்கப்பட்டு 76 நூற்பாவாலும் கூறப்பட்டுள்ளது. இந்நூற்பாக்களுள் 38 நூற்பாக்கள் நன்னூலிலிருந்து அவ்வாறே எடுத்துக்கொண்டனவாகும். இவர் பெரும்பாலும் நன்னூலாரையே தழுவிச் செல்கின்றார். காலத்துக்கேற்ற மாற்றங்களையும் தழுவியுள்ளார். சொல் லதிகாரத்தில் வீரசோழியக்காரரைப் பின்பற்றுகிறார். இவர் விளக்கும் பொருளதிகாரம் புதுமை வாய்ந்தது. இவ்வதி காரத்தில் முன்னையோர் வழிச் செல்லாமல் தனிவழி

அமைக்கிறார். யாப்பதிகாரத்தின் இறுதியில், பாட்டியல் நூல்களைத் தழுவி 'செய்யுள் மரபியல்' கூறுகிறார். இங்குப் பிரபந்தங்களின் இலக்கணங்களைக் காணலாம். அணிய திகாரத்தில் புது அணிகள் சிலவற்றைச் சேர்த்தும் பழைய அணிகள் சிலவற்றை நீக்கியும் இலக்கணம் வகுக்கிறார். தற்குறிப்பேற்ற அணியினை இவர் 'ஊகாஞ்சித அணி' என்பர். இதற்கு விளக்கமும் காட்டுகின்றார். இவர் கூறும் விடையில் வினா அணி, வினாவில் விடை அணி என்பன புதுமையும் சிறப்பும் வாய்ந்தனவாகும் எனலாம். இந்நூல் பயிலவேண்டிய, ஆராய வேண்டிய ஒன்றாகும். ஆனால் படிப்பார் எவரும் இல்லை. படிக்க நினைப்பாருக்கும் இந்நூல் கிடைக்கவில்லை. தமிழ்ப்பணி செய்வதில் தளரா ஊக்கம் கொண்ட சிறித்தவர்கள் இந்நூலினைப் பதிப்பித்து அறிவுலகுக்கு வழங்க வேண்டும். வீரமாமுனிவரின் இலக்கணக் கொள்கைகள் பற்றித் தமிழுலகம் ஆராய்தல் இன்றியமையாதது ஆகும்.

14

அலகு-3

# அகப்பொருள் விளக்கம்

அகப்பொருள் இலக்கணம் பற்றி அறிய, மாணவர்கள் பயிலும் நூலாக விளங்குவது, அகப்பொருள் விளக்கம் ஆகும். இந்நூல் அகப்பொருள் இலக்கணத்தினை வரையறைப்படுத்தி, தெளிவாக்கி விளக்கமாகக் கூறுவதால் இப்பெயர் பெற்றது போலும். இந்நூல் ஆசிரியர் நாற்கவிராச நம்பியாவார். இவர் பெயருடன் சேர்த்து இந்நூல் நம்பியகப் பொருள் எனவும் வழங்கப் பெறும்.

## நாற்கவிராச நம்பி:

இவரது இயற்பெயர் நம்பி நயினார் என்பர். இவர், ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி வித்தாரகவி என்னும் நான்கு வகைக் கவிகளையும் பாடவல்லவர் ஆதலால் நாற்கவிராசர் எனச் சிறப்புப் பெயர் பெற்று நாற்கவிராச நம்பி என அழைக்கப்பட்டார் என்று கூறுவர். ஆனால் இவர் இயற்றியனவாக வேறு இலக்கிய நூல்கள் கிடைக்கவில்லை. பாடியதற்கு உரிய குறிப்பும் இல்லை. இவர் புளிங்குடி

உய்யவந்தானெனும்[1] முத்தமிழாசானின் புதல்வர்.
ஆசிரியரும் ஆவர். புளிங்குடி என்னும் ஊர், இவ்வூ
நாட்டில் பொருநையாற்றின் வடகரையில் உள்ள பாண்டிய
ஒருசாராரும், தொண்டை நாட்டில் உள்ளது என்று மற்றொரு
சாராரும் கூறுகின்றனர். பாண்டிய நாட்டில் உள்ள
புளிங்குடியே இவர் ஊராய் இருத்தல் கூடும் என்று அறிஞர்
கருதுகின்றனர்... இவரைப் பற்றிக் கூறும் சிறப்புப்பாயிரம்,

'..........................................இத்தலத்து
இருபெரும் கலைக்கும் ஒருபெருங் குரிசில்
பாற்கடல் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பியென் பவனே'

எனப் பாராட்டுகின்றது.

## சமயமும் காலமும்

இந்நூற் சிறப்புப் பாயிரம்,

'மாந்தரும் தேவரும் வாழ்த்திமுக் குடைக்கீழ்
ஏந்தெழில் அரிமான் ஏந்துபொன் னணைமிசை
மதிமூன்று கவிப்ப உதய மால்வரைக்
கதிரொன்று இருந்தெனக் காண்டக இருந்து
தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய
உத்தமன் புளிங்குடி உய்யவந் தானெனும்
முத்தமி ழாசான் மைந்தன்'

எனக் கூறுவதால் இவர் சமணர் எனக் கருதலாம்.

இந்நூலின் சிறப்புப் பாயிர உரை, இந்நூல் குலசேகர பாண்டியன் காலத்தது என்று கூறுகின்றது. இங்குக் குறிக்கப் பெறும் குலசேகர பாண்டியன் முதல் சடையவர்மன் குலசேகரனே ஆவான். இவன் காலம் கி.பி. 1192 - 1266 ஆகும். எனவே இவர் காலம் கி.பி. 12-ம் நூற்றாண்டின் இறுதியும் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியும் என்பது பெறப்படும்.

## நூல் அமைப்பு

இந்நூல், அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் ஐந்து பிரிவுகள் கொண்டது 252 நூற்பாக்களையுடையது.

1. உய்யவந்தநயினார் என்பதும் ...

| | | |
|---|---|---|
| அகத்திணையியல் | - நூற்பா | 116 |
| களவியல் | - நூற்பா | 54 |
| வரைவியல் | - நூற்பா | 29 |
| கற்பியல் | - நூற்பா | 10. |
| ஒழிபியல் | - நூற்பா | 43. |
| | | 252 |

இந்நூலின் இறுதியில் அமைந்த வெண்பா ஒன்று பின் வருமாறு சூத்திரத் தொகை கூறுகின்றது.

"அகத்திணை நூற்றுப் பதினே ழடங்கா
மிகுந்தகள வைம்பதுடன் மேனான் – கிகுத்த
வரைவிருபத் தொன்பஃது மன்னுங் கற் பீரைந்
துரையொழிபு நாற்பஃதோ டொன்று"

இவ்வெண்பா, அகத்திணை 117 நூற்பா உடையது என்றும், ஒழிபியல் 41 நூற்பா உடையது என்றும் குறிப்பிடுகின்றது. சிறப்புப் பாயிரத்தையும் சேர்த்தால் அகத்திணை 117 ஆகும். ஆனால், வரைவியல் 41 நூற்பா எனக் கூறுகின்றது. இப்பொழுது 43 நூற்பா உள்ளது. இவ்வேறுபாட்டின் காரணம் புரியவில்லை. ஒருவேளை பின் வந்தோர், ஒரு நூற்பாவை இரண்டு நூற்பாவாக அமைத்துக் கொண்டு, அவ்வாறே இரண்டு நூற்பாவை நான்கு நூற்பாவாக விரித்திருக்கலாம்.

# 16

# பன்னிருபாட்டியல்

பன்னிருபடலம் என்பது போலப் பன்னிருபாட்டியல் என்னும் பெயர் அமைந்துள்ளது. பன்னிருபடலம் என்பது, பன்னிரு ஆசிரியர்கள் பாடிய நூல் ஆதலால் அப்பெயர் பெற்றது. இப்பன்னிருபாட்டியல் அவ்வாறு பாடிய புலவர்களின் எண்ணிக்கையால் பெயர் பெற்றது என்று கூறுதல் இயலாது. பன்னிருபாட்டியலில் சில நூற்பாக்களைப் பாடிய ஆசிரியர்களின் பெயர் தெரியாத நிலையிலும் 13 புலவர்கள் பெயர் காணப்படுகின்றது. எனவே புலவர்களின் எண்ணிக்கையால் ஏற்பட்ட பெயர் என்றல் பொருந்தாது. பன்னிருபாட்டியல் 12 பொருத்தங்களைக் கூறுகின்றது. அதனால் பன்னிருபாட்டியல் என்ற பெயர் ஏற்பட்டது எனக் கருதலாம். இந்நூலில் 11 வகைப் பொருத்தமும் 12-ம் பிரிவாக எழுத்தின் பிறப்பும் கூறப்பெறுவதால் இப்பெயர் பெற்றது என்பர் சிலர். இவ்வாறு கூறுவோர் எழுத்தின் பிறப்பும் பாட்டியலில் ஒரு பொருத்தம் என்பதனை அறியார்கள் போலும். இன்னும் சிலர்[1] பன்னிருபடலமும் பன்னிரு பாட்டியலும் ஒன்றெனக் கருதி மயங்கி எழுதுவர்.

1. தெ.பொ.மீ; சமணத் தமிழ் இலக்கிய வரலாறு. பக்கம் 150.

**ஆசிரியர்கள்:**

இப்போது தெரிந்தவரை உள்ள 13 புலவர்களின் பெயர்களும் பின்வருமாறு:- பொய்கையார், பரணர், இந்திர காளியார், அவிநயனார், அகத்தியர், கல்லாடனார், கபிலர்; சேந்தம்பூதனார், கோவூர்க்கிழார், மாபூதனார், சீத்தலையார், பல்காயனார், பெருங்குன்றூர்க்கிழார். இப்பெயர்கள் பழம் புலவர்களின் பெயர்களாகக் காட்சி தருகின்றன. ஆனால் நூலினை நோக்கினால் பழம் புலவர்கள் அல்லர்; அவர்கள் பெயர்களைக் கொண்ட பிற்காலப் புலவர்கள் என்பது விளங்கும்.

**காலம்:**

இந்நூலில் அகத்தியர், இந்திரகாளியர் என்னும் இருவர் பெயர்களும் காணப்படுகின்றன. இவர்கள் முறையே பாட்டியலில் வந்த அகத்தியர் நெறிக்கும், இந்திரகாளியர் நெறிக்கும் தலைவர்கள் எனக் கருதலாம். இங்குக் குறிக்கப் பெறும் அகத்தியர், பாட்டியல் செய்தவராதல் கூடும். இந்திர காளியர் இந்திரகாளி செய்தவராதலும் கூடும். கி.பி. 12-ம் நூற்றாண்டில் தோன்றிய வெண்பாப் பாட்டியல் 'இந்திரகாளி நெறி'யைப் பின்பற்றியது என்பர் அந்நூலுரை காரர். இதனால் பன்னிருபாட்டியல் கி.பி. 12-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கருதலாம். சிலர் இந்நூல் கி.பி. 14-ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதுவர்.

**நூல் அமைப்பு:**

இந்நூல் தொகுப்பு நூல் ஆகும். எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்னும் மூன்று இயல்களையுடையது. பாயிரச் செய்யுள் ஒன்று நீங்கலாக 358 நூற்பாக்களையுடையது.

எழுத்தியல், சொல்லியல் என்னும் இரண்டு பிரிவுகளும் 12 பொருத்தங்களைப் பற்றிப் பேசுகின்றன. எழுத்தியலில் பிறப்பு, வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள், நாள் என்னும் 9 வகைப் பொருத்தங்களும், சொல்லியலில், சீர், மங்கலம், பெயர் என்னும் 3 பொருத்தங்களும் பற்றிக்

கூறப்பட்டுள்ளது. இனவியல், பிரபந்தங்களின் இலக்கணம் சொல்கின்றது. இப்பகுதியில் 66 பிரபந்தங்களைப் பற்றிப் பேசுகின்றார். மேற் கணக்கு, கீழ்க்கணக்கு, பத்துப்பாட்டு என்பனவற்றின் இலக்கணங்கள் இந்நூலில் காணப்படுதல் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். ஆயிரம் யானையைக் கொன்ற வீரன்மேல் பரணி பாடவேண்டும் எனப் பாட்டியல்கள் கூற. இப்பாட்டியல் எழுநூறு யானைகளைக் கொன்ற வீரன் மீதும் பரணி பாடலாம் என வழிவகுக்கின்றது. இதனை நோக்கும்போது, யானைகளை எண்ணிக் கொன்றவனே வீரன் என்பதன்று என்பதும், பரணிபாட ஏற்றவன் சிறந்த வீரனே என்பதும் பெறப்படும்.

18

49

# வரையறுத்த பாட்டியல்

பாட்டியலார் கூறும் பத்துப் பொருத்தங்களுள், மங்கலப் பொருத்தத்தினை எடுத்துக் கொண்டு வரையறுத்துக்கூறும் நூல் இதுவாகும். இதனால் இந்நூல் வரையறுத்த பாட்டியல் எனப் பெயர் பெற்றது. இது, சம்பந்தமா முனிவரை வழிபட்ட ஒருவரால் இயற்றப்பெற்றமையின் சம்பந்தப் பாட்டியல் எனவும் பெயர் பெறும்.

நூலாசிரியரைப் பற்றிய செய்திகள் ஏதும் அறிய இயலவில்லை. காலமும் புலனாகவில்லை. இந்நூலாசிரியர், சம்பந்தமா முனிவரை வழிபட்டு இந்நூலை இயற்றினேன் எனக்கூறுவதால், இவர் சம்பந்தமா முனிவரின் மாணவராக இருக்கலாம். இதனை, 'பார்கொண்ட சோதியன் சம்பந்த மாமுனி பாதமலர். நேர் கொண்டிறைஞ்சி நிகழ்த்துகின்றேன்' என்னும் அடிகளால் அறியலாம்.

இந்நூல் பத்துச் செய்யுட்களால் இயன்றது; கட்டளைக் கலித்துறையாக அமைந்தது; அந்தாதி அமைப்பு உடையது. இந்நூலால் வரும் பயனை இவரே பின்வருமாறு கூறுகின்றார்.

'உளக்கவி வாணர் எனைப்போல நாடொறும்
உண்பொருட்டால்
வளக்கவி பாடிப் பிழைப்பது இந் நூலின்
வரும்பயனே.'
'ஏர்கொண்ட சொற்புல வோர்செய்த பாட்டியல்
கற்கமிக்க
சீர் கொண்ட மாமதி இல்லா தவர்க்குத்
தெரிவுறவே'

இந்நூல் இன்ன எழுத்துக்களை முதலாக உடைய பெயர்களுக்கு, இன்மங்கலச் சொல்வர வேண்டும்என விதிக்கின்றது. சான்றாக நு, நூ, யூ என்னும் எழுத்துக்களை முதலாக உடைய பெயர்களுக்கு எழுத்து என்னும் மங்கலச் சொல் வரவேண்டும் என்பர். இரண்டு செய்யுட்களில் மகடூஉ முன்னிலை உள்ளது.

இந்நூலுக்கு ஓர் உரை உள்ளது. இவ்வுரை பொழிப்புரையும், குறிப்புரையுமாகக் காணப்படுகின்றது. இவ்வுரையாசிரியர் பற்றிய செய்திகள் விளங்கவில்லை. விளக்கவுரை யொன்று, கொ. இராமலிங்கத் தம்பிரான் அவர்கள் வரைந்துள்ளார்கள்.

## 19

# சிதம்பரப் பாட்டியல்

பாட்டியல் நூல்களுள் சிதம்பரப் பாட்டியலும் ஒன்றாகும். இந்நூலின் அமைப்பும் பிறவும் பிறபாட்டியல் நூல்களினின்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இப்பாட்டியலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் திருத்தமாகப் பதிப்பித்துள்ளனர்.

**நூலாசிரியர்:**

இந்நூலின் ஆசிரியர் பரஞ்சோதியார் ஆவார். இவர், சிதம்பரபுராணம், மதுரையுலா ஆகிய நூல்க[illegible]பாடிய புராணத் திருமலைநாதரின் புதல்வர். இச்செய்திகள்

"சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் தமிழால்
சிதம்பர புராணமுதல் செய்து – விதம்பெறுசீர்
சேர்ந்த புராணத் திருமலைநா தன்தவத்தால்
சார்ந்தபரஞ் சோதியென்பான் தான்"

என்னும் பாயிர வெண்பாவால் தெரிகின்றன. திருமலைநாதர் குடும்பத்தினர் சந்[illegible] புராணத் ஞானப்பிரகாசரது வழிவழி அடியார்கள் ஆவர்.

சிதம்பர புராணச் செய்யுள் ஒன்றில், 'சகற்கு ஈரேழு நூறுடன் முப்பஃதியைந்த ஆண்டெல்லை' என்னும் தொடர்வருகிறது. இதனால் சகஆண்டு 1430-ல் திருமலைநாதர் இப்புராணம் பாடினார் என்பது விளங்கும். சகம் 1430க்குக் கி.பி. 1508. ஆகும். எனவே பரஞ்சோதியார், இவரது தந்தையாராகிய புராணத்திருமலை நாதரின் காலத்தவர் என்பதும், அக்காலம் கி.பி பதினாறாம் நூற்றாண்டு என்பதும் புலனாம். இவர் சைவர். சிதம்பரத்தைச் சேர்ந்தவர். இவர் இயற்றிய நூல் சிதம்பரப்பாட்டியல் ஒன்றேயாகும்.

## நூல் அமைப்பு:

இந்நூல், பிறபாட்டியல் நூல்கள்போன்று தொடர் நிலைச் செய்யுள் இலக்கணம் மட்டும் கூறாமல், தனி நிலைச் செய்யுளும் தொடர்நிலைச் செய்யுளும் ஆகிய இரண்டின் இலக்கணமும் கூறுகின்றது. தனிநிலைச் செய்யுளின் இலக்கணம் கூறுவன யாப்பு நூல்கள். தொடர்நிலைச் செய்யுளின் இலக்கணம் கூறுவன பாட்டியல் நூல்கள். இவ்விரண்டின் பணியையும் இப்பாட்டியல் நூல் செய்கின்றது.

இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல் என ஐந்து இயல்களைக் கொண்டது. 47 செய்யுட்களை உடையது. இச்செய்யுட்கள் யாவும் எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தத்தால் அமைந்துள்ளன. இவையன்றி நூலின்முன் காப்புச்செய்யுள் ஒன்றும், பாயிரச் செய்யுள் நான்கும் ஆக ஐந்து செய்யுட்கள் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | உறுப்பியல் செய்யுள் | 6 |
| 2 | செய்யுளியல் செய்யுள் | 5 |
| 3. | ஒழிபியல் செய்யுள் | 5 |
| 4. | பொருத்தவியல் செய்யுள் | 11 |
| 5. | மரபியல் செய்யுள் | 20 |
| | | 47 |

இந்நூலுக்குச் செவ்வியதோர் உரை உள்ளது.